என்று சொன்னார்கள். ஏன் ஒப்படைக்கப்படவில்லை? புதுக்கோட்டை நகரத்தில் 40,000-க்கும் மேற்பட்ட மக்கள் அந்தப் பகுதியில் வாழ்கிறார்கள். ஆனால் இன்றையவரையில் அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. அவர்களுக்குப் பட்டா வழங்கப்படுமா? பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஏன் ஒப்படைக்கப்படவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் 10 வீதிகள் மட்டும்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்று தகவல் கொடுத்திருக்கிறார்கள். மீதி 26 தெருக்களுக்கும் 26 குழாய்க் கிணறுகளும், 176 தெரு விளக்குகளும் அமைத்துள்ளதாக தகவல் கொடுத்திருக்கிறார்கள். வேறு விவரங்கள் வேண்டுமானால் தனிக் கேள்வி போடவும்.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுகின்றபோது லாரி மூலம் தண்ணீர் வழங்குவதாகச் சொன்னார்கள். புதுத்தோப்பு, என்.ஜி.ஓ. காலனி, காமராஜபுரம், நிஜாம் காலனி போன்ற பகுதிகளுக்கு லாரி மூலம் தண்ணீர் வழங்குகிறார்கள். ஆனால் அது போதிய அளவுக்கு இல்லை என்பதால் வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் அங்கே அடிப்பம்பு அமைத்துத் தருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை மாநகராட்சியின் ஆண்டு வருமானம்.

285—(* வினா எண் 13005) திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியின் ஆண்டு வருமானம் எவ்வளவு?

(ஆ) அதன் விவரம் என்ன?

1987 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்னை மாநகராட்சியின் 1985-86-ம் ஆண்டிற்குரிய வருமானம் ரூ. 3,920.10 இலட்சங்களாகும்.

(ஆ) அதன் விவரம் கீழ் வருமாறு:

(தொகை இலட்சங்களில்)

வருமான விவரம்.	(தொகை இலட்சங்களில்)
1. அரசால் ஒதுக்கப்பட்டது	1,517.19
2. சொத்து வரி	1,440.18
3. தொழில் வரி முதலான இதர வரிகள்	246.19
4. வணிகம், உரிமம் முதலான கட்டணம்	296.77
5. கல்வி மற்றும் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு அரசின் மானியம்.	157.11
6. விற்பனை மற்றும் வாடகை	20.97
7. இதர இனங்கள்	241.69
	3,920.10

குருங்குளத்தில் காகித ஆலை அமைத்தல்.

286—(* வினா எண் 10398) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கும் கரும்புச் சக்கையைக் கொண்டு அப்பகுதியில் ஓர் காகித ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலே புகளூரில் தொடங்கப்பட்டிருக்கும் காகித ஆலை போன்று, குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கும் கரும்புச் சக்கையைக் கொண்டு